**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டக் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**ந.க.எண். 772/மாஒ4/பசெகு/ஒபக/2023, நாள்.02.06.2023.**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – OoSC – “தொடர்ந்து கற்போம்” திட்டம் – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி அளவிலான குழுவிற்கு 05.06.2023 அன்று கூட்டம் நடத்துதல் – சார்பு.

பார்வை: சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர், அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.1587/C7/OoSC/SS/2023, நாள்.31.05.2023.

2. இவ்வலுவலக ந.க.எண்.772/DC4/OoSC/SS/2023, நாள்.01.06.2023.

*********

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம், பார்வை 1–ல் காண் சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு OoSC “தொடர்ந்து கற்போம்” முன்னோடித் திட்டம் 2023–24 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தி அம்மாணவர்களை வருகின்ற ஜூன் 2023 மாத நடைபெறவுள்ள துணைத் தேர்வில் தேர்ச்சி பெறச் செய்து மாணவர்கள் அடுத்த நிலைக் கல்வியினைத் தொடர்வது குறித்து கீழ்கண்டவாறு பள்ளி அளவிலான குழு அமைத்து அக்குழுவிற்கு 05.06.2023 அன்று கூட்டம் நடத்தி கூட்டப் பொருளாக பார்வை 1 மற்றும் 2–ல் தெரிவித்துள்ள விவரங்களை கலந்தாலோசித்து அது சார்ந்த அறிக்கையை இவ்வலுவலகம் ஒப்படைக்குமாறு அனைத்து மேற்பார்வையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**பள்ளி அளவிலான குழு விவரம்**

| வ. எண் | அலுவலர் / பணியாளர் விவரம் | பொறுப்பு |
|---|---|---|
| 1 | பள்ளித் தலைமையாசிரியர் | உறுப்பினர் ஒருங்கிணைப்பாளர் |
| 2 | ஊராட்சி மன்றத் தலைவர் | உறுப்பினர் |
| 3 | உள்ளாட்சி வார்டு உறுப்பினர் | உறுப்பினர் |
| 4 | கிராம நிர்வாக அலுவலர் | உறுப்பினர் |
| 5 | வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர் | உறுப்பினர் |
| 6 | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் | உறுப்பினர்கள் |
| 7 | இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர் | உறுப்பினர் |
| 8 | அங்கன்வாடிப் பணியாளர்கள் | உறுப்பினர் |
| 9 | மகளிர் சுய உதவிக் குழு ஊக்குநர் | உறுப்பினர் |

02/06/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

2/6/23

பெறுநர்:

1. அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்: 1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடை நிலை), வேலூர் மாவட்டம்.